5. கவன ஈர்ப்பு

(அ) புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி யூனியன் திருமணஞ்சேரி கோவிலுக்குச் செல்லும் பாதையின் இடையில் பாலம் இல்லாததால் பொதுமக்கள் அவதிப்படுவது குறித்து

முற்பகல் 11.35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு.

திரு. எஸ். சண்முகநாதன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. எஸ். சண்முகநாதன்.

திரு. எஸ். சண்முகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, கறம்பக்குடி யூனியன், திருமணஞ்சேரி கோவிலுக்குச் செல்லும் பாதையின் இடையில் பாலம் இல்லாததால் பொதுமக்கள் அவதிப்படுவது குறித்து" மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவை முன்னர் வைக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கை

கவன ஈர்ப்பு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பாலம் புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள புதுக்கோட்டை-பட்டுக்கோட்டை சாலை கி.மீ.40/6-ல் பிரிந்து திருமணஞ்சேரி வழியாக கருக்காகுறிச்சி செல்லும் ஊராட்சி ஒன்றிய சாலையில், கி.மீ.1/6-ல், சுமார் 200 மீட்டர் நீர்வழிப்பாதையுடன் குறுக்கிடும் அக்னியாற்றில் கட்டப்பட வேண்டியதாகும். இவ்விடத்தில் ஓர் உயர்மட்டப்பாலம் கட்ட தற்போதைய விலை விகிதப்படி, தோராயமாக ரூ.225 இலட்சங்கள் தேவைப்படும்.

எட்டாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் சாலை மற்றும் பாலம் அமைக்கும் பணிகளை நெடுஞ்சாலைத் துறையின் பகுதி-2 திட்டத்தில் மேற்கொள்ள வழிவகை செய்யப்படாததால், மேற்குறிப்பிட்ட பணியினை நெடுஞ்சாலைத் துறையின் பகுதி-2 திட்டத்தின்கீழ் செயல்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை. இருப்பினும் மேற்படி பணியானது, மத்திய சாலை நிதித்

திட்டத்தின்கீழ் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதற்கு மத்திய அரசின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றால், பணி செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. எஸ். சண்முகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னால் வைக்கப்பட்டிருக்கிற அந்த அறிக்கையை நான் படித்தேன். இன்றைக்கு ஆலங்குடி தொகுதியில் இருக்கிற அக்னியாற்றின் குறுக்கே சுமார் 200 மீட்டர் நீர்வழிப்பாதையில் பாலம் கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இன்றைய மதிப்பின்படி ரூ.225 இலட்சம் தேவைப்படுகிறது என்ற காரணத்தால் இதைச் சொல்லி இருக்கிறார்கள். அங்கே அந்தப் பாலம் கட்டுவதால் அங்கேயிருக்கிற கறம்பக்குடி, திருமணஞ்சேரி பகுதிகளைப் பொறுத்தவரையில் இது ஒரு நீண்டநாள் கோரிக்கையாக இருப்பதை பூர்த்தி செய்ய இயலும். நெடுவாசல், நெடுவாசல் கிழக்கு, மேற்கு பகுதிகளை இணைக்கிற வகையில் இந்தப் பாலம் கட்டப்படாததால் ஒரு 15, 20 கிராமங்கள் பேருந்து வசதி இல்லாமல் இருக்கின்றன. நம் நாடு சுதந்திரம் அடைந்து 47 ஆண்டுகளுக்குப் பின்னாலும்கூட போக்குவரத்து வசதி இல்லாத சூழ்நிலை இருக்கிற காரணத்தால் அந்த ஏழையெளிய மக்களுடைய நீண்ட நாளைய கோரிக்கையை ஏற்று, உயர்மட்டப் பாலம் கட்ட முடியவில்லை என்றாலும், ஒரு காஸ்வே, ஒரு தரை மட்டப்பாலம் தமிழக அரசின் சார்பில் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலத்தை கட்டுவதற்கு ஏறத்தாழ 2½ கோடி ரூபாய் தேவைப்படுகிறது. இதை சென்ட்ரல் ரோட் பண்ட் ஸ்கீமில் சேர்க்கலாம் என்று மத்திய அரசின் சாலைத் திட்டத்தின் கீழ் பரிந்துரை செய்திருக்கிறோம். இதிலே உயர் மட்டப் பாலம் கட்டினால் அதிகமாக செலவு ஏற்படும் என்ற காரணத்தால் தரைமட்டப் பாலம் கட்டுவதற்காக, மாவட்ட ஆட்சித் தலைவர் டீசென்ட்ரலைஸ்ட் பிளானிலாவது, அல்லது ஸ்மால் சேவிங்ஸ் போன்றதில் எல்லாம் சேர்த்து ஒரு 25 இலட்சம் ரூபாயிலே கட்டலாமா என்று மறுபரிசீலனையை அரசு செய்து கொண்டிருக்கிறது. ஆகவே, இதுசம்பந்தமாக அரசு விரிவாகப் பரிசீலித்து ஒரு தரைமட்டப் பாலத்தை கட்டுவதற்கான முயற்சியை நிதியாதாரத்திற்கு ஏற்ப எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். சண்முகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாற்றுத் திட்டத்தை இன்றைக்கு அறிவித்து இருக்கிறார்கள். இன்றைக்கு மாவட்டத்தினுடைய

'டீசென்ட்ரலைஸ்ட் பிளான்' அல்லது மற்ற பிளானில் கிட்டத்தட்ட 25 இலட்சம் ரூபாய்க்கான மாற்றுத் திட்டத்தைச் சொல்லி இருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை விரைவுபடுத்தி, அந்தப் பகுதியில் வாழ்கிற மக்களுக்கு பயன்படுகிற அளவுக்கு, விரைந்து செயல்படுத்துவதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்ததைப் போல, இது சம்பந்தமாக துறை அதிகாரிகளிடத்தில் கலந்து பேசி, தரைமட்டப் பாலம் கட்டுவதற்கு 25 இலட்சம் ரூபாய் தோராயமாக ஆகும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கான கரெக்ட் எஸ்டிமேட் எவ்வளவு, எப்படி செயல்படுத்தலாம், நிதியாதாரத்தை எப்படித் திரட்டுவது, எந்தெந்த வழிகளில் 25 இலட்சம் ரூபாயைத் திரட்டி அந்தப் பால வேலையை முடிக்கலாம் என்பதையெல்லாம் நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் நம்முடைய நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகளோடு ஆலோசிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, அது சம்பந்தமாக கலந்தாலோசித்த பின்னர் அரசு உடனடியாக முடிவுகளை அறிவிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து துணிகளை கோ-ஆப்டெக்ஸ் கொள்முதல் செய்யாததால் நெசவாளர்கள் பதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. இரா. தாமரைக்கனி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. இரா. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே: "தமிழ் நாட்டில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பனாரஸ் ரக சேலைகள், வேஷ்டிகள், பாவாடை பீஸ் போன்ற கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள துணிகளை கோ-ஆப்டெக்ஸ் ஓராண்டுக் காலமாக கொள்முதல் செய்யாததால் நெசவாளர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள கவலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.